மேற்குறிப்பிடப்பட்டுள்ள வகைகள் ஒவ்வொன்றின் கீழும் பேரவைக்கு உறுப்பினர்களை நியமிப்பதில் பின்பற்றப்படவேண்டிய செயன்முறையை அரசியலமைப்புக் குறித்துரைக்கின்றது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள உபபந்தி (உ) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஐந்து ஆட்களையும் பெயர்குறித்து நியமிப்பதில், பேரவையின் ஆக்கவமைவானது தொழில்முறைப் பல்வகைமை, சமூகப் பல்வகைமை உள்ளடங்கலாக இலங்கைச் சமூகத்தின் பன்மைத் தன்மையைப் பிரதிபலிக்கின்றது என்பதை பிரதம அமைச்சர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

(உ) என்னும் உட்பந்தியின் கீழ் நியமிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத ஆட்கள் பகிரங்க வாழ்வில் அல்லது உயர்தொழிலில் தமக்கென்று சிறந்த நிலையை ஏற்படுத்திக்கொண்ட கீர்த்திவாய்ந்தவர்களும் நேர்மையுடையவர்களும் அத்துடன் ஏதேனும் அரசியற்கட்சியின் உறுப்பினரல்லாதவர்களுமான ஆட்களாதல் வேண்டும். இவர்களது பெயர்குறித்த நியமனம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

பேரவையின் பதவி வழியல்லாத உறுப்பினர்களின் பதவிக்காலம் நியமனத் திகதி யிலிருந்து மூன்று ஆண்டுகள் ஆகும்.

2. அரசியலமைப்புப் பேரவைக்கு உறுப்பினர்களை நியமித்தல்

அரசியலமைப்பில் வகுக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க, அரசியலமைப்புப் பேரவையின் தற்போதைய உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்பட்டனர்:-

அரசியலமைப்பின் 41அ(1)(ஈ) எனும் உறுப்புரையின் பிரகாரம் கௌரவ சட்டத்தரணி நிமல் சிறிபால த சில்வா, பா.உ., அவர்களைக் கௌரவ சனாதிபதி நியமித்தார்.

பேரவையின் பதவி வழி உறுப்பினர்கள், சபாநாயகர், பிரதம அமைச்சர், பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் சந்தித்து, அரசியலமைப்பின் 41அ(1)(உ) எனும் உறுப்புரையின் பிரகாரம் உறுப்பினர்களை நியமிப்பது பற்றிக் கலந்துரையாடினர்.

அரசியலமைப்பின் 41அ(1)(உ)(i) எனும் உறுப்புரையின் பிரகாரம், அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானோரின் இணக்கப்பாட்டுடன் கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம், பா.உ., அவர்களைக் கௌரவ பிரதம அமைச்சர் பெயர்குறிக்க கௌரவ சனாதிபதி அவர்கள் நியமித்தார். நியமித்தார்.

அரசியலமைப்பின் 41அ(1)(உ)(ii) ஆம் உறுப்புரையின் பிரகாரம், எதிர்க்கட்சித் தலைவர் சார்ந்துள்ள அரசியற் கட்சியின் அல்லது சுயேட்சைக் குழுவின் பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானோரின் இணக்கப்பாட்டுடன் கௌரவ கபீர் ஹஷிம், பா.உ., அவர்களைக் கௌரவ பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பெயர்குறிக்க கௌரவ சனாதிபதி அவர்கள் நியமித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத மூன்று ஆட்களை நியமிப்பதற்காக, செய்திப்பத்திரிகை விளம்பரமொன்றின் மூலம் விண்ணப்பங்களைக் கோருவதற்கு சபாநாயகர், பிரதம அமைச்சர், மற்றும் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் தீர்மானித்தனர். இதன் பிரகாரம் வார இறுதி மற்றும் வார நாள் செய்திப்பத்திரிகைகளில் அந்த விளம்பரம் வெளியிடப்பட்டது. மேற்குறித்த குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவத்தில் விண்ணப்பதாரர்களின் விபரங்கள் பெறப்பட்டன. மொத்தமாக 120 தனிநபர் விண்ணப்பங்கள் பெறப்பட்டதுடன், அரசியலமைப்பின் 41அ(1)(உ)(iii) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பிரதம அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் பின்வரும் ஆட்களை நியமிப்பதற்கு இணங்கினார்.

1. கலாநிதி(திரு) பிரதாப் இராமானுஜம்

2. டாக்டர் (திருமதி)தில்குஷி அனுலா விஜேசுந்தர

3. கலாநிதி (திருமதி) வெலிகம விதான ஆரச்சிகே தினேஷா சமரரத்ன

அதன்பின்னர்

அரசியலமைப்பின் 41அ (5) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, மேற் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்கள் 2023.01.18 அன்று பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டதுடன் அரசியலமைப்பின் 41அ(1)(உ)(III)ஆம் உறுப்புரையின் பிரகாரம், கௌரவ சபாநாயகர் அவர்கள் பெயர் குறிக்க கௌரவ சனாதிபதி அவர்களால் பேரவையின் உறுப்பினர்களாக மேற்கூறப்பட்ட உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

இதன் பிரகாரம், அரசியலமைப்புப் பேரவையின் தற்போதைய அமைப்பு பின்வருமாறு:

கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,பா.உ., சபாநாயகரும் அரசியலமைப்புப் பேரவையின் தவிசாளரும்

கௌரவ தினேஷ் குணவர்தன,பா.உ., பிரதம அமைச்சர்

கௌரவ சஜித் பிரேமதாஸ,பா.உ., பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

கௌரவ சட்டத்தரணி நிமல் சிறிபால த சில்வா, பா.உ.,

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம், பா.உ.,

கௌரவ கபீர் ஹஷிம், பா.உ.,

கலாநிதி(திரு) பிரதாப் இராமானுஜம்

டாக்டர்(திருமதி) தில்குஷி அனுலா விஜேசுந்தர

கலாநிதி திருமதி) வெலிகம விதான ஆரச்சிகே தினேஷா சமரரத்ன

41அ(1)(ஊ) எனும் உறுப்புரையின் ஏற்பாடுகளின் கீழ் பாராளுமன்ற உறுப்பினரின் நியமனம் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

3. அரசியலமைப்புப் பேரவையின் கடமைகள் மற்றும் பணிகள்

அரசியலமைப்பின் கீழும் ஏனைய சட்டங்களின் கீழும் அரசியலமைப்புப் பேரவையிடம் கடமைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

3.1 பேரவையின் பணிகள்

அரசியலமைப்பினால் ஆணை வழங்கப்பட்டுள்ள கடமைகள் இரு மடங்கானவை.

1. அரசியலமைப்பின் உறுப்புரை **41ஆ என்பதற்கான அட்டவணையில்** குறித்துரைக்கப்பட்டுள்ள ஆணைக்குழுக்களின் தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்களின் நியமனத்துக்காக சனாதிபதிக்கு வழங்கப்படும் பெயர்குறித்த நியமனங்களின் பரிந்துரை.

அரசியலமைப்பின் உறுப்புரை 41ஆ என்பதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆணைக்குழுக்கள்:-

i. தேர்தல் ஆணைக்குழு
ii. பகிரங்க சேவை ஆணைக்குழு
iii. தேசிய பொலிஸ் ஆணைக்குழு
iv. கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு
v. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
vi. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துகைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு
vii. நிதி ஆணைக்குழு
viii. எல்லை நிர்ணய ஆணைக்குழு
ix. தேசிய பெறுகை ஆணைக்குழு

2. **அரசியலமைப்பின் உறுப்புரை 41இ என்பதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பதவிகளின் நியமனத்துக்காக சனாதிபதியிடமிருந்தான பெயர்குறித்த நியமனங்களின் அங்கீகாரம்.**

அரசியலமைப்பின் உறுப்புரை 41இ என்பதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பதவிகள்:-

I. பிரதம நீதியரசர் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகள்
II. மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் மற்றும் நீதிபதிகள்
III. தவிசாளர் தவிர்ந்த நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்
IV. சட்டத்துறைத் தலைமையதிபதி

V. இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்

VI. கணக்காய்வாளர் தலைமையதிபதி

VII. பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி

VIII. நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர்(ஒம்புட்ஸ்மன்)

IX. பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

அரசியலமைப்பினால் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் பேரவையின்மீது விதிக்கப்படக்கூடியவாறான அல்லது அதற்கு ஒப்படைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு கடமைகளையும் பணிகளையும் பேரவை புரிவதற்கும் நிறைவேற்றுவதற்குமென அரசியலமைப்பின் 41எ(2) எனும் உறுப்புரை ஏற்பாடுகளை வழங்குகின்றது.

தொடர்புடைய சட்டங்களில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு கடமைகளை நிறைவேற்றும் பொருட்டு அரசியலமைப்புப் பேரவைக்கு அழைப்பு விடுப்பதற்கான ஏற்பாடுகளைப் பின்வரும் சட்டங்கள் கொண்டுள்ளன:-

1. 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டம்

நிதி அமைச்சர், அரசியலமைப்பு பேரவையின் கலந்தாலோசிப்புடன், நலன்புரி நன்மைகள் சபையின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களை நியமிப்பார். பேரவையின் ஆக்கவமைவு ஐந்து உறுப்பினர்கள் ஆகும்.

அதற்கமைய, அவ்வாறான நபர்களைத் தெரிவு செய்வதற்கான தெரிவடிப்படை தொடர்பில் நிதி அமைச்சரும் அரசியலமைப்பு பேரவையும் இணங்க வேண்டும்.

2. 2002 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, பணச்சட்ட (திருத்தச்) சட்டம்

பணச் சபை பின்வருவனவற்றினை உள்ளடக்கும் –

(அ) மத்திய வங்கி ஆளுநரே சபையின் தவிசாளராக இருப்பார்;

(ஆ) நிதி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் செயலாளர் பதவியினை அச்சந்தர்ப்பத்தில் வகிப்பவர்; மற்றும்

(இ) அரசியலமைப்பு பேரவையின் ஒத்திசைவுடன் நிதியமைச்சரின் விதப்புரைக்கமைய ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்கள்.

இலங்கை மத்திய வங்கி சட்டமூலம் 2023 யூலை 20 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது, எனினும் சபாநாயகரினால் அதற்குச் சான்றுரை எழுதப்பட்டதுடன் அமைச்சரினால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து அது வலுவுக்கு வரும் பணச்சட்டச் சட்டத்தினை (அத்தியாயம் 422) இரத்துச் செய்வதற்கான ஏற்பாடுகளை இச்சட்டமூலம் வழங்குகின்றது.

3. 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டம்

அரசியலமைப்பு பேரவையின் ஒத்திசைவுடன் கொள்கை அபிவிருத்தி மற்றும் அமுல்படுத்தல் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஐந்து(05) உறுப்பினர்களை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு கொண்டிருக்க வேண்டும்.

4. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம்

தகவலறியும் ஆணைக்குழு அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் பேரில் சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஐந்து (05) உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

5. 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும் பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டம்.

காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது (OMP) அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் பேரில் சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஏழு (07) உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

6. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம்

மிகை விதிப்பு மேன்முறையீட்டுக் குழுவையும் அதன் தவிசாளரையும் அரசியலமைப்புப் பேரவை நியமிக்க வேண்டும். மிகை விதிப்பு மேன்முறையிட்டுக் குழு ஐந்து(05) உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

7. 2018 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகச் சட்டம்

இழப்புக்கான எதிரீடுககள் அலுவலகமானது அரசியலமைப்பு பேரவையின் விதப்புரையின் பேரில் சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஐந்து (05) உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

8. 2023 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலகச் சட்டம்

அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது, பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலர் மற்றும் பிரதி பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலர் சனாதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டும். சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம், பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலர் மற்றும் பிரதி பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலராக நியமிக்கப்படவேண்டிய ஆட்களின் விதந்துரைக்கப்பட்ட பெயர்ப்பட்டியலொன்றை அரசியலமைப்புப் பேரவைக்கு அனுப்புதல் வேண்டும்.

பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலர் மற்றும் பிரதி பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலரை நியமித்தல் அல்லது அப்பதவியில் தொடர்ந்து செயற்படுதல் தொடர்பான தகைமையீனமொன்று தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடொன்று தொடர்பிலான நடவடிக்கை முறை தொடர்பில் சட்டத்தின் 17 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ளதுடன், பேரவையினால் அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேவையான விதப்புரைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

3.2 பேரவையின் கடமைகள் (உறுப்புரிமை 41எ)

முன் சென்ற மூன்று மாதங்களின் போதான செயற்பாடுகளின் அறிக்கையை மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை பேரவை சனாதிபதிக்கும் பாராளுமன்றத்துக்கும் சமர்பிக்க வேண்டும்.

பேரவை அதன் கடமைகள் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல் மற்றும் புரிதல் தல் தொடர்பான விதிகளை உருவாக்குவதற்காக வலுவூட்டப்பட்டுள்ளது. இவ்வாறான சகல விதிகளும் வர்த்தமானியில் வெளியிடப்படும் என்பதுடன் அவ்வாறு வெளியிடப்பட்டு மூன்று மாதங்களினுள் அவை பாராளுமன்றத்தின் முன் சமர்பிக்கப்பட வேண்டும்.

3.3 பேரவையின் கூட்டங்கள் (உறுப்புரை 41உ)

அரசியலமைப்பின் உறுப்புரை 41 உ என்பதன் பிரகாரம், பேரவையானது மாதந்தோறும் குறைந்தது இரண்டு தடவைகளாவது கூடும் என்பதுடன் அவசியமாக இருக்கக் கூடிய அளவுக்குக் கூடலாம்.

பேரவையின் எக்கூட்டத்தினதும் கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாக இருக்கும். ஏகமனதான தீர்மானத்துடன் மேற்கொள்ளவேண்டிய தேவையுடைய அனைத்து விதப்புரையினையும் அங்கீகாரத்தினையும் அல்லது தீர்மானத்தினையும் முன்னெடுப்பதற்குப் பேரவை முயற்சிக்கும். எனினும் ஏகமனதான தீர்மானம் கிடைக்காதவிடத்து, தீர்மானத்திற்காக அவை சமர்பிக்கப்படும் அவ்வாறான கூட்டங்களில் சமூகமாயிருக்கும் பேரவையின் ஐந்திற்கும் குறையாத உறுப்பினர்களால் அவற்றுக்கு ஆதரவு வழங்கப்படாதிருப்பின், பேரவையினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு விதப்புரையும் அங்கீகாரமும் அல்லது தீர்மானமும் செல்லுபடியற்றதாகவிருக்கும்.

4. செயலாளர் நாயகம் மற்றும் பேரவையின் பணியாட்டொகுதியினர்

பேரவையின் செயலாளர் நாயகம் மூன்று (03) வருட பதவிக் காலத்துக்காக பேரவையினால் நியமிக்கப்படுவார்.

பேரவை அதன் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அவசியமெனக் கருதும் அவ்வாறான அலுவலர்களை, பேரவையினால் தீர்மானிக்கப்படக் கூடியதான அவ்வாறான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைய நியமிக்க வேண்டும்.

அரசியலமைப்பு பேரவை அதன் பணிகளை ஆரம்பிக்கையில், நிரந்தரச் செயலாளர் நாயகம் ஒருவர் நியமிக்கப்படும் வரையில் அப்பதவிக்காகப் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினை நியமித்ததுடன் செயலகமானது பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியினால் கையாளப்பட்டது.

2023.05.23 அன்றிலிருந்து செயலூக்கம் பெறும் வகையில், திரு. டப்ளியூ.பி.டி தசநாயக்கவை அரசியலமைப்புப் பேரவையின் செயலாளர் நாயகமாக நியமித்தது.

2003 இல் எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பயனைக்கொண்டு, பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியின் பதவிநிலையினுள் தனியானதொரு பதவிநிலையொன்று உருவாக்கப்பட்டதுடன் தொடர்புடைய பணியாட்டொகுதியினரை அதிலிருந்தே உள்வாங்க முடியும்.

5. அரசியலமைப்பின் உறுப்புரை 41ஆ என்பதற்கான அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆணைக்குழுக்களை உருவாக்குதல்

உறுப்புரை 41ஆ என்பதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டிருக்கும் ஆணைக்குழுக்களின் தவிசாளர்களாகவும் உறுப்பினர்களாகவும் நியமிப்பதற்குப் பொருத்தமான ஆட்களை விதந்துரைத்தல் பேரவையின் பிரதான பணிகளில் ஒன்றாகும்.

- உறுப்புரை 41ஆ என்பதற்கான அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டிருக்கும் ஆணைக்குழுக்கள்

1. தேர்தல் ஆணைக்குழு
2. பகிரங்க சேவை ஆணைக்குழு
3. தேசிய பொலிசு ஆணைக்குழு
4. கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு
5. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
6. இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பிலான சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு
7. நிதி ஆணைக்குழு
8. எல்லை நிர்ணயஆணைக்குழு
9. தேசிய பெறுகை ஆணைக்குழு

- மேற்குறிப்பிடப்பட்ட ஆணைக்குழுக்களின் உருவாக்கம் தொடர்பாக அரசியலமைப்புப் பேரவையின் கடமைகள்:-

மேலே குறித்துரைக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோரின் நியமனத்திற்கான ஆட்களை அரசியலமைப்புப் பேரவை விதந்துரைக்கும். அத்தகைய ஏதேனும் ஆணைக்குழுவின் தவிசாளராக அல்லது ஓர் உறுப்பினராக பதிற் கடமையாற்றுவதற்கும் ஆட்கள் நியமிக்கப்படும்போது, அதனை ஒத்த வகையில் பேரவை அவ்வாறானதொரு விதப்புரையை மேற்கொள்ளுதல் வேண்டும்.

41ஆ ஆம் உறுப்புரைக்கான அட்டவணையிற் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைக்குழுக்களின் தவிசாளர்களாக அல்லது உறுப்பினர்களாக நியமனம் செய்வதற்கான தகுதியான மற்றும் உகந்த ஆட்களை அத்தகைய நியமனத்துக்கான சந்தர்ப்பம் எழுகின்ற பொழுதெல்லாம், சனாதிபதிக்கு விதந்துரைத்தல் பேரவையின்

கடமையாதல் வேண்டும் என்பதுடன். அத்தகைய விதப்புரைகள் பால் சமத்துவம் உட்பட இலங்கைச் சமூகத்தினரின் பல்லின சமூதாயங்களைப் பிரதிபலிக்கின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு முயற்சித்தலும் வேண்டும். அத்தகைய ஆணைக்குழுக்களின் தவிசாளர்களின் விடயத்தில், பேரவையானது நியமனம் செய்வதற்காக மூன்று ஆட்கசளை விதந்துரைத்தல் வேண்டுமென்பதுடன், சனாதிபதி விதந்துரைக்கப்பட்ட ஆட்களில் ஒருவரைத் தவிசாளராக நியமித்தலும் வேண்டும் .

அனைத்து ஆணைக்குழுக்களுக்குமான பெயர்குறித்த நியமனங்கள் தொடர்பாகப் பேரவையால் கருத்தில் கொள்ளப்படும் பொதுத் தகைமைகள்:

ஆணைக்குழுக்களுக்கான ஆட்களின் நியமனத்திற்காக ஆட்களை விதந்துரைக்கையில், அவ்வாறு பெயர்குறித்து நியமிக்கப்படும் ஆட்கள் அரசியலமைப்பு மற்றும் உரிய சட்டங்கள் ஆகியவற்றில் குறித்துரைக்கப்பட்டிருக்கும் ஏதேனும் தகைமைக்கு மேலதிகமாகப் பின்வரும் பொதுத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதற்கு பேரவை இணங்கியுள்ளது.

-> ஆணைக்குழுக்களுக்கான நியமனத்திற்காக விதந்துரைக்கப்படும் ஆட்கள்:

- வாய்மையுடையவர்களாக இருக்க வேண்டும்
- ஏதேனும் தவறுக்காகக் குற்றத்தீர்ப்பு அளிக்கப்படாதவர்களாக இருக்க வேண்டும்
- ஏதேனும் நிலுவையான வழக்குத் தொடுப்பு இல்லாத ஆட்களாக இருத்தல் வேண்டும் .
- ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினர் என்ற ரீதியில், தமது நியமனம் தொடர்பாக எவ்விதமான தனிநலன் முரண்பாடும் அற்றவர்களாக இருக்க வேண்டும்.
- சமூகத்தில் நன்மதிப்புடைய ஆட்களாக இருக்க வேண்டும்.
- தங்களது தொழிலிலும் தொழில் வாழ்க்கைப் பாதையிலும் கீர்த்தியுடன் மேம்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

-> விதப்புரைகளை மேற்கொள்கையில் பால்நிலை உள்ளிட்ட, இலங்கை சமூகத்தின் பன்முகத்தன்மையை ஆணைக்குழுக்களின் ஆக்கவமைவு பிரதிபலிப்பதைப் பேரவை உறுதிப்படுத்துகின்றது.

ஆனணக்குழுக்களின் உறுப்பினர்களாக விதந்துரைக்கப்படும் ஆட்களிடம் இருந்து, அவர்களின் நியமனத்தின்போது அவர்களது சொத்துகள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய பிரகடனமொன்றினைப் பெற்றுக்கொள்வதையும் பேரவை கௌரவ சனாதிபதியிடம் விதந்துரைத்துள்ளது.

அரசியலமைப்பிலும் தொடர்புடைய ஏனைய சட்டங்களிலும் குறித்துரைக்கப்பட்டவாறு, ஒவ்வொரு ஆணைக்குழுவினதும் ஆக்கவமைவு தொடர்பான, அதன் உறுப்பினர்களின் தகைமைகள் மற்றும் தகமையீனங்கள் தொடர்பான தகவல்களின் தொகுப்பு பின்வருமாறு:

1. தேர்தல் ஆணைக்குழு

- ஆணைக்குழுவின் ஆக்கவமைவு
  - ஆணைக்குழு தவிசாளர் தவிசாளர் நான்கு (04) உறுப்பினர்கள் உட்பட ஐந்து (05) உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் .
  - ஏதேனும் தொழிலில் அல்லது நிர்வாக அல்லது கல்வித் துறையில் அவர்கள் புகழ்பெற்றிருத்தல் வேண்டும்.
  - ஓர் (01) உறுப்பினர், பிரதித் தேர்தல் ஆணையாளராக அல்லது அதற்கு மேற்பட்ட பதவி ஒன்றை வகித்து ஓய்வு பெற்ற அலுவலராக இருக்க வேண்டும்.
- ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினராக நியமிக்கப்படும் ஆளொருவர், பாராளுமன்ற உறுப்பினராக, மாகாண சபை உறுப்பினராக அல்லது உள்ளூராட்சி அதிகார சபை உறுப்பினராக, அல்லது ஒரு நீதித்துறை அலுவலராக, அல்லது ஒரு பகிரங்க அலுவலராக அல்லது ஏதேனும் பதவியில் அரசின் ஊழியராக இருத்தல் ஆகாது.
- அரசியலமைப்பு பேரவையின் விதப்புரையின் பேரில் சனாதிபதி ஓர் உறுப்பினரைத் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.
- பதவிக்காலம்: ஐந்து (05) வருடங்கள்.

2. பகிரங்க சேவை ஆணைக்குழு

- ஆணைக்குழுவின் ஆக்கவமைவு
  - ஆணைக்குழு தவிசாளர் மற்றும் எட்டு (08) உறுப்பினர்கள் உட்பட ஒன்பது (09) உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
  - ஆகக்குறைந்தது மூன்று (03) உறுப்பினர்கள் பகிரங்க அலுவலர்களாக பதினைந்து (15) வருடங்களுக்கு குறையாத சேவையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினராக நியமிக்கப்படும் ஆளொருவர் பாராளுமன்ற உறுப்பினராக, மாகாண சபை உறுப்பினராக அல்லது உள்ளூராட்சி அதிகார சபை உறுப்பினராக இருத்தலாகாது.
- அரசியலமைப்பு பேரவையின் விதப்புரையின் பேரில், சனாதிபதி ஓர் உறுப்பினரைத் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.
- பதவிக்காலம்: மூன்று (03) வருடங்கள்

3. தேசிய பொலிசு ஆணைக்குழு

- ஆணைக்குழுவின் ஆக்கவமைவு
    - ஆணைக்குழு, தவிசாளர் உள்ளிட்ட ஐந்திற்குக் (05) குறையாத, ஏழுக்கு (07) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் பேரில், சனாதிபதி ஓர் (01) உறுப்பினரைத் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.
- ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினராக நியமிக்கப்படும் ஆள் ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராக, மாகாண சபை உறுப்பினராக அல்லது உள்ளூராட்சி அதிகார சபை உறுப்பினராக இருத்தலாகாது.
- அரச சேவையில் பகிரங்க அலுவலொருவராகவிருந்த அல்லது நீதித்தறை அலுவலொருவராகவிருந்த ஆள் ஒவ்வொருவரும், அத்தகைய நியமனம் பயனுறத் தொடங்கியதும் அத்தகைய பதவியை வகியாதொழிய வேண்டும் என்பதுடன், பகிரங்க அலுவலொருவராக அல்லது நீதித்துறை அலுவலொருவராக மேற்கொண்டு நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதலுமாகாது.
- பதவிக்காலம்: மூன்று (03) வருடங்கள்

4. கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு

- ஆணைக்குழுவின் ஆக்கவமைவு (அரசியலமைப்பின் 153 அ எனும் உறுப்புரை)
    - ஆணைக்குழு தவிசாளர் (பதவி வழியில்- கணக்காய்வாளர் தலைமையதிபதி மற்றும் நான்கு (04) உறுப்பினர்கள் உட்பட ஐந்து (05) உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- ஏனைய நான்கு(04) உறுப்பினர்கள் (தவிசாளர் தவிர்ந்த) பின்வருபவர்களை உள்ளடக்குதல் வேண்டும்.

  - ✓ பிரதிக் கணக்காய்வாளர் தலைமையதிபதியாக அல்லது அதற்கு மேற்பட்ட பதவி வகித்துக் கணக்காய்வாளர் தலைமையதிபதித் திணைக்களத்தில் இருந்து ஓய்வுபெற்ற இரண்டு (02) அலுவலர்கள்.
  - ✓ இலங்கை உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் அல்லது மேல்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற ஒரு (01) நீதிபதி.
  - ✓ இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு I இனைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஓர் (01) அலுவலர்.

➢ பதவிக்காலம்: மூன்று (03) வருடங்கள்

5. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

➢ ஆணைக்குழுவின் ஆக்கவமைவு

- ஆணைக்குழு தவிசாளர் மற்றும் நான்கு (04) உறுப்பினர்கள் உட்பட ஐந்து (05) உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- அவர்கள் மனித உரிமை தொடர்பான விடயங்களில், அறிவினை அல்லது நடைமுறை அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- ஆணைக்குழு சிறுபான்மைச் சமுகங்களிலிருந்து பிரதிநிதிகளை உள்ளடக்க வேண்டும்.

➢ அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் பேரில் சனாதிபதி ஓர் உறுப்பினரைத் தவிசாளராக நியமிக்க வேண்டும்.

➢ பதவிக் காலம்: (03) வருடங்கள்

➢ 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளும் இந்த ஆணைக்குழு தொடர்பில் ஏற்புடையதாக இருக்கும்.

6. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துகைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு

➢ ஆணைக்குழுவின் ஆக்கவமைவு.

- ஆணைக்குழு தவிசாளர் மற்றும் 02 உறுப்பினர்கள் உட்பட மூன்று (03) உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும் .
- இரண்டு (02) உறுப்பினர்கள் உயர்நீதிமன்றம் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதிகளாக இருக்க வேண்டும்.

- ஓர் (01) உறுப்பினர் குற்றவியல் புலனாய்வு மற்றும் சட்ட அமலாக்கல் தொடர்பில் பரந்த அனுபவத்தைக் கொண்டவராக இருக்க வேண்டும்.

- உயர்நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஒய்வு பெற்ற நீதிபதியாக உள்ள ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவரை சனாதிபதி தவிசாளராக நியமிக்க வேண்டும்.
- பதவிக் காலம்: ஐந்து (05) ஆண்டுகள்
- மேலேயுள்ள ஏற்பாடுகள், 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துகைகளைப் புலனாய்வு செய்வதற்கான சட்டத்திற்கு அமைவாக உள்ளன. 2023 யூலை 19 அன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் சபாநாயகரால் சான்றுறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் அமைச்சரினால் வர்த்தமானிப் பத்திரிக்கையில் பிரசுரிக்கப்படும் திகதி முதல் இச்சசட்டத்தின் ஏற்பாடுகள் நடைமுறைக்கு வரும் .குறிப்பிட்ட சட்டமானது1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துகைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினை நீக்கி, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துகைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு தொடர்பான புதிய ஏற்பாடுகளை அறிமுகம் செய்கிறது.

7. **நிதி ஆணைக்குழு**

- நிதி ஆணைக்குழுவின் ஆக்கவமைவு
  - ஆணைக்குழு வங்கியின் ஆளுநர் மத்திய திறைசேரிச் செயலாளர் மற்றும் மூன்று (03) உறுப்பினர்கள் உட்பட ஐந்து (05) உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்.
  - பதவிவழி உறுப்பினர்கள் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்கள்
    - நிதி, சட்டம், நிர்வாகம், வியாபாரம் அல்லது கற்றல் துறையில் புகழ்பெற்றவர்களாக அல்லது உயர் பதவிகளை வகித்தவர்களாக இருக்க வேண்டும்.
    - மூன்று (03) பிரதான சமுதாயங்களையும் பிரதிநிதித்துவம் செய்வோராக இருக்க வேண்டும்
- அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் பேரில், சனாதிபதி ஓர் உறுப்பினரைத் தவிசாளராக நியமிக்க வேண்டும்.
- பதவிக் காலம்: மூன்று (03) வருடங்கள்

8.**எல்லை வரையறை ஆணைக்குழு**

- ஆணைக்குழுவின் ஆக்கவமைவு (அரசியலமைப்பின் 95 ஆம் உறுப்புரை)

- ஆணைக்குழு மூன்று (03) உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்=> தவிசாளர் + இரண்டு (02) உறுப்பினர்கள்.
- அவர்கள் அரசியலில் முனைப்பாக ஈடுபடலாகாது

- அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் பேரில், சனாதிபதி ஓர் உறுப்பினரைத் தவிசாளராக நியமிக்க வேண்டும்.
- பதவிக் காலம்: குறித்துரைக்கப்படவில்லை

9. **தேசிய பெறுகை ஆணைக்குழு**

- ஆணைக்குழுவின் ஆக்கவமைவு
  - ஆணைக்குழு ஐந்து (05) உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்=> தவிசாளர் + நான்கு (04) உறுப்பினர்கள்
  - குறைந்தது மூன்று உறுப்பினர்கள் பெறுகை, கணக்கியல், சட்டம் அல்லது பொதுநிர்வாகத்தில் நிருபிக்கப்பட்ட அனுபவத்தினைக் கொண்டிருக்க வேண்டும்.
- அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் பேரில், சனாதிபதி ஓர் உறுப்பினரைத் தவிசாளராக நியமிக்க வேண்டும்.
- பதவிக் காலம்: மூன்று (03) வருடங்கள்

6. மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் பேரவை நிறைவேற்றிய பணிகள்

6.1 பேரவையின் கூட்டங்கள்

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் அரசியலமைப்புப் பேரவை இருபத்தைந்து (25) தடவைகளில் பின்வரும் தினங்களில் கூடியது:-

2023.01.25, 2023.01.30, 2023.02.07, 2023.02.09, 2023.02.13, 2023.02.14, 2023.02.23, 2023.03.09, 2023.03.21, 2023.03.24, 2023.04.01, 2023.04.04, 2023.04.25, 202304.26, 2023.05.03, 2023.05.09, 2023.05.15, 2023.05.23, 2023.06.06, 2023.06.20, 2023.06.22, 2023.07.05, 2023.07.14, 2023.07.18, 2023.07.21

6.2 அரசியலமைப்பின் உறுப்புரை 41ஆ என்பதில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆணைக்குழுக்களுக்கு ஆட்களை நியமிப்பதற்கான விதப்புரைகள்

அரசியலமைப்பின் உறுப்புரை 41ஆ என்பதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆணைக்குழுக்களின் உறுப்பினர்களாக நியமிப்பதற்காக ஆர்வமும் தகைமையும் கொண்ட தனிநபர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரிப் பேரவை ஒரு பத்திரிகை விளம்பரத்தை வெளியிட்டது.

பேரவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவத்தில் அவ்வாறான தனிநபர்களின் விபரங்கள் பெறப்பட்டன. விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களைத் தபால் மூலமோ அல்லது மின்னஞ்சல் மூலமோ சமர்ப்பிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. இதன் பிரகாரம், இரட்டிப்பாக வந்தவைகள், தாமதமாகக் கிடைத்தவைகள், மற்றும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் உள்ளடங்கலாகப் பெற்றுக்கொண்ட மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 1591 இருந்தது.

பின்வரும் எண்ணிக்கையிலான தனிநபர் விண்ணப்பங்கள் ஒவ்வொரு ஆணைக்குழுவுக்குமெனப் பரிசீலிக்கப்பட்டன.

- தேர்தல் ஆணைக்குழு - 115
- பகிரங்க சேவை ஆணைக்குழு - 246
- தேசிய பொலிசு ஆணைக்குழு - 252
- கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு – 44

- இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு - 171
- இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துகைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு - 89
- நிதி ஆணைக்குழு - 84
- எல்லை நிர்ணய ஆணைக்குழு - 77
- தேசிய பெறுகை ஆணைக்குழு -112

விண்ணப்பங்களைச் சுருக்கப் பட்டியலிடும் பொறுப்பினைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத மூன்று உறுப்பினர்களிடம் பேரவை ஒப்படைத்தது. சுருக்கப் பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரிகள் முழுப் பேரவையினாலும் பரிசீலிக்கப்பட்டு, இறுதிப் பட்டியல் கலந்துரையாடல்கள் மூலம் தயாரிக்கப்பட்டது. குறிப்பிட்ட ஓர் ஆணைக்குழுவுக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகள் இல்லாதிருந்த சந்தர்ப்பங்களில் ஏனைய ஆணைக்குழுக்களுக்காக விண்ணப்பித்தவர்களில், தேவைப்படும் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகளை, அவர்களின் இணக்கத்துடன் பரிசீலிப்பதற்குப் பேரவை தீர்மானித்தது.

நியமிக்கப்பட்டவர்களுக்கு எதிராக ஏதேனும் வழக்காடல்கள் நிலுவையில் உள்ளனவா எனவும் அவ்வாறான வழக்காடல்களின் தன்மை பற்றியும் பேரவை அவர்களிடம் விசாரித்தது. தேசிய பொலிசு ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்படுவதற்காகப் பரிந்துரைக்கப்படுவதற்கு தெரிவு செய்யப்படும் பொலிசு அலுவலகர்களாக பணியாற்றியவர்களிடம் அடிப்படை உரிமைகள் மீறல் தொடர்பாக அவர்களுக்கு எதிராகக் கடந்த காலத்தில் ஏதேனும் வழக்குகள் இருந்தனவா எனப் பேரவை விசாரித்ததுடன் வழக்கறிஞர்களிடம் அவர்கள் தற்போது ஏதேனும் குற்றவியல் வழக்குகளைக் கையாளுகின்றார்களா எனவும் அவர்கள் தேசிய பொலிசு ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டால், அவ்வாறான வழக்குகளைத் தொடர்ந்தும் கையாளுவார்களா எனவும் பேரவை விசாரித்தது.

ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்களுக்கான பரிந்துரைகளைப் பேரவை பரிசீலித்த போது, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துகைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவைத் தாபிப்பதற்கான ஏற்பாடுகளில் திருத்தங்களை முன்மொழிந்துள்ள, 'ஊழல் எதிர்ப்பு' எனத் தலைப்பிடப்பட்ட சட்டமூலம் ஒன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டது. எனவே, ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பான நடவடிக்கைகள் நிறைவடையும் வரை குறிப்பிட்ட ஆணைக்குழுவிற்கான ஆட்களைத் தெரிவுசெய்வதைத் தாமதப்படுத்தப் பேரவை இணங்கியது.

பேரவையின் பரிந்துரையின் பேரில், பின்வரும் ஆட்கள் சம்பந்தப்பட்ட ஆணைக்குழுவின் தவிசாளர்களாகவும் உறுப்பினர்களாகவும் கௌரவ சனாதிபதியினால் நியமிக்கப்பட்டனர்:-

(i) பகிரங்க சேவை ஆணைக்குழு

1. திரு. சனத் ஜயந்த எதிரிவீர – தவிசாளர்
2. கலாநிதி (திருமதி) அகம்பொடி தமிதா நந்தனீ டி சொய்ஸா
3. திருமதி சித்தி மரீனா மொஹமட்
4. திரு. கொடவத்தகே சரத் அருண சாந்த டி சொய்ஸா
5. திருமதி நடராஜாபிள்ளை ரஞ்சினி
6. திரு. மாணிக்க படதுருகே ரோஹண புஷ்பகுமார
7. திரு. நரசிங்க ஹேரத் முதியன்சேலாகே சித்ரானந்த
8. திரு. சந்திரரத்ன பல்லேகம
9. பேராசிரியர் . நாகநாதன் செல்வக்குமரன்

(ii) தேசிய பொலிசு ஆணைக்குழு

1. திரு. ஏகநாயக்க வீரகோன் முதியன்சேலாகே லலித் ஏகநாயக்க - தவிசாளர்
2. திரு. பள்ளிய குருகே சரத் காமினி டி சில்வா
3. திருமதி தயா கமனி ரேணுகா ஏகநாயக
4. திரு. தில்ஷான் கபில ஜயசூரிய
5. திரு. கணபதிப்பிள்ளை கருணாகரன் கருணாகரன

- திரு. மொஹமட் ஹுசைன் மொஹமட் பைசரை நியமிக்கப் பேரவை பரிந்துரைத்தது. எவ்வாறாயினும், குறித்த நியமனத்தைத் தொடர்ந்து அவர் தேசிய பொலிசு ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்தார்.
- தேசிய பொலிசு ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினராக திரு. சுகததாச ரன்னுகேயை நியமிப்பதைப் பேரவை பரிந்துரைத்தது. எனினும், கௌரவ சனாதிபதி குறிப்பிட்ட நியமனத்தினை இதுவரை மேற்கொள்ளவில்லை.

(iii) கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு

1. திருமதி நந்தசீலி கொடகந்த
2. திரு. அர்த்தநாயக முதலிகே தர்மஜித் நயனகான்த
3. ஓய்வு பெற்ற நீதியரசர் நிஹால் சுனில் ராஜபக்ஷ

4. திரு. ஞானனந்தராஜா தேவஞானம்

(iv) நிதி ஆணைக்குழு

1. திரு. சுமித் அபேசிங்க - தவிசாளர்
2. திரு. மேயன் வாமதேவன்
3. திரு. துவான் நலீன் ஓசென்

(v) எல்லை நிர்ணய ஆணைக்குழு

1. திரு. கனகரத்னம் தவலிங்கம் -தவிசாளர்
2. திரு. அமீர் மொஹமட் இப்ராஹீம்
3. கலாநிதி(திருமதி) அனிலா டயஸ் பண்டாரநாயக்க

(vi) தேசிய பெறுகை ஆணைக்குழு

1. திருமதி வளவகே சுதர்மா கருணாரத்ன - தவிசாளர்
2. திரு. தரனகம ஆராச்சிகே பியசிறி தரனகம
3. திரு. அகுருகோட கமகே புபுது அஸன்க குணவன்ச
4. திரு. சின்னகண்டு சுமந்திரன் சின்னகண்டு
5. திரு. வர்ணகுலசூரிய ஐவன் திசேரா

(vii) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

1. ஓய்வுபெற்ற நீதியரசர் லகஷ்மன் டிகிரி பண்டார -தவிசாளர்
2. திரு. நிமலசேன கர்டிய புஞ்சிஹேவா
3. திரு. தையமுத்து தனராஜ்
4. பேராசிரியர்(திருமதி) பாத்திமா பர்ஸானா ஹனீபா
5. கலாநிதி (திரு) கிஹான் தினுக் குணதிலக

(viii) தேர்தல் ஆணைக்குழு

1. திரு. ரத்நாயக்க முதியன்சேலாகே ஆனந்த லொகுபண்டார ரத்நாயக்க - தவிசாளர்
2. திரு. மாதற ஆராச்சிகே பத்மசிறி சந்திரவங்ச பெரேரா
3. திரு. அமீர் மொஹமட் பாயிஸ்

6.3 அரசியலமைப்பின் உறுப்புரை 41இ என்பதில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்களை நியமிப்பதற்கான அங்கீகாரம்

மீளாய்விற்குட்பட்ட காலப்பகுதியின் போது, அரசியலமைப்பின் உறுப்புரை 41இ என்பதன் கீழான பின்வரும் விடயங்களைக் குழு பரிசீலித்தது:-

- **உயர் நீதிமன்ற நீதியரசர்களின் நியமனம்**
  - அரசியலமைப்பின் உறுப்புரை 41இ என்பதன் பிரகாரம் கௌரவ பிரதம நீதியரசரிடமிருந்து பெற்றுக்கொண்ட அபிப்பிராயத்துடன் சேர்த்து, பெயர் குறித்து நியமிக்கப்பட்டவரின் மூப்புரிமையினைப் பரிசீலித்த பின்னர், உயர்நீதிமன்ற நீதியரசரான கௌரவ எல்.டி.பீ.தெஹிதெனிய ஓய்வுபெற்றதால் உயர்நீதிமன்ற நீதியரசர் பதவியில் ஏற்பட்ட வெற்றிடத்திற்காக மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரான கௌரவ கே.பீ. பர்னாந்து அவர்களை உயர்நீதிமன்ற நீதியரசராக நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரையினைப் பேரவை ஏகமனதாக அங்கீகரித்தது.

- **நீதிச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் நியமனம்**
  - அரசியலமைப்பின் உறுப்புரைகள் 41இ மற்றும் 111ஈ என்பனவற்றின் பிரகாரம், உயர் நீதிமன்ற நீதியரசரான கௌரவ எல்.டி.பீ.தெஹிதெனிய ஓய்வுபெற்றதன் விளைவாக நீதித்துறை சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு, உயர்நீதிமன்ற நீதியரசரான கௌரவ ஈ.ஏ.ஜீ.ஆர். அமரசேகர அவர்களை நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரையினைப் பேரவை ஏகமனதாக அங்கீகரித்தது.
  - அரசியலமைப்பின் உறுப்புரைகள் 41இ(1), 111ஈ மற்றும் 111உ என்பனவற்றின் பிரகாரம் உயர் நீதிமன்ற நீதியரசரும் உயர் நீதிமன்றத்தின் மிகவும் சிரேஷ்ட நீதிபதியுமான கௌரவ புவனெக அலுவிகாரே அவர்களை நீதிச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராக மீளநியமிப்பதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரையினைப் பேரவை ஏகமனதாக அங்கீகரித்தது.

- **மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரின் நியமனம்**
  - கௌரவ பிரதம நீதியரசரிடமிருந்து பெற்றுக்கொண்ட அபிப்பிராயத்துடன் சேர்த்து, பெயர் குறித்து நியமிக்கப்பட்டவரின் மூப்புரிமையினைப் பரிசீலித்த பின்னர், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அப்போதைய தலைவரான கௌரவ

கே.பீ.பர்னாந்து அவர்களை உயர் நீதிமன்ற நீதியரசராக நியமித்ததால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் பதவியில் ஏற்பட்ட வெற்றிடத்திற்காக மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதியான கௌரவ என்.பி.பீ.டீ.எஸ். கருணாரத்ன அவர்களை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராக நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரையினைப் பேரவை ஏகமனதாக அங்கீகரித்தது.

- **மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் நியமனம்**
  - கௌரவ பிரதம நீதியரசரிடமிருந்து பெற்றுக்கொண்ட அபிப்பிராயத்துடன் சேர்த்து, பெயர் குறித்து நியமிக்கப்பட்டவரின் மூப்புரிமையினைப் பரிசீலித்த பின்னர், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதியான கௌரவ என்.பி.பீ.டீ.எஸ். கருணாரத்ன அவர்களை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராக நியமித்ததால், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதி பதவியில் ஏற்பட்ட வெற்றிடத்திற்காக மேல் நீதிமன்றத்தின் நீதிபதியான திரு எம்.ஏ.ஆர்.மரிக்கார் அவர்களை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதியாக நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரையினைப் பேரவை ஏகமனதாக அங்கீகரித்தது.

- **நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்சுமான்) பதவிக்கான நியமனம்**
  - நிருவாகத்துக்கான பாராளுமன்ற அப்போதைய ஆணையாளரான (ஒம்புட்சுமன்) திரு. கே.டி. சித்ரசிறி பதவியினை இராஜினாமாச் செய்ததால் நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்சுமன்) பதவியில் ஏற்பட்ட வெற்றிடத்திற்காக ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதியான கௌரவ திரு. கே.பி.கே ஹிரிம்புரேகம அவர்களை நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரையைப் பேரவை ஏகமனதாக அங்கீகரித்தது.

- **பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் பதவிக்கான நியமனம்**
  - 2023.03.26 அன்றில் இருந்து, மூன்று (03) மாத காலப்பகுதிக்காக, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியாக திரு. சி. டீ. விக்கிரமரத்ன அவர்களை மீளநியமிப்பதற்கு, அரசியலமைப்பின் 41இ(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம், பேரவையின் அங்கீகாரத்தினைக் கோரி கௌரவ சனாதிபதியிடமிருந்து விதப்புரையொன்றினைப் பேரவை பெற்றிருந்தது. கட்டாய ஓய்வு பெறும் வயதை அடைந்ததன் பேரில், 2023.03.26 அன்றிலிருந்து செயலூக்கம் பெறும் வகையில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி பதவியில் இருந்து திரு. சி.டீ. விக்கிரமரத்ன

ஓய்வு பெறுவதற்கு இருந்தார். 2023.03.26 அன்றில் இருந்து மூன்று(03)மாத காலத்துக்குப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியாக திரு சி.டீ. விக்கிரமரத்ன அவர்களை நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரையினைப் பேரவை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

- 2023.07.09 அன்றில் இருந்து செயலூக்கம் பெறும் வகையில், 03 மாத காலப்பகுதிக்காக, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியாக திரு. சி.டீ. விக்கிரமரத்ன அவர்களை நியமிப்பதற்கு கௌரவ சனாதிபதி பேரவையின் அங்கீகாரத்தினைக் கோரினார். நீண்ட கலந்துரையாடலின் பின், அரசியலமைப்பின் 41இ(2) ஆம் உறுப்புரையின் பிரகாரம், 2023.07.09 அன்றில் இருந்து செயலூக்கம் பெறும் வகையில், மூன்று(03) மாத காலப்பகுதிக்காகப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி பதவியில் பதிற் கடமையாற்றுவதற்காக திரு. சி.டீ. விக்கிரமரத்னவின் நியமனத்தை அங்கீகரிப்பதற்குப் பேரவை ஏகமனதாக இணங்கியது. எவ்வாறாயினும், கௌரவ சட்டத்துறைத் தலைமையதிபதியினைக் கலந்தாலோசித்த பின்னர், 2023.07.09 அன்றில் இருந்து, மூன்று(03) மாத காலப்பகுதிக்காக, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியாக திரு. சி.டீ. விக்கிரமரத்ன அவர்களை மீள நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரையினை அங்கீகரிப்பதற்குப் பேரவையின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் இணங்கினர். கௌரவ சனாதிபதியிடமிருந்தான தொடர்பாடல்கள் மூலம் சுட்டிக்காட்டப்பட்டவாறு , பொருத்தமான ஓர் அதிகாரியினைச் சேவையில் இருந்து தாமதமின்றி விதந்துரைப்பது பொருத்தமானதென்ற பேரவையின் கருத்தினைக் கௌரவ சனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவருவதற்கும் பேரவை இணங்கியது.

➢ **பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பதவிக்கான நியமனம்**

- 2023.05.23 அன்றில் இருந்து செயலூக்கம் பெறும் வகையில், அப்போதைய பாராளுமன்றச் செயலாளர் நாயகமான திரு. தம்மிக்க தசநாயக்க ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பதவியில் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு, பணியாட்டொகுதிப் பிரதானியும் பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகமுமான திருமதி கே. ஏ. ரோஹணதீரவை அரசியலமைப்பின் 41இ(1) ஆம் மற்றும் 65(1) ஆம் உறுப்புரைகளின் பிரகாரம் பாராளுமன்றச் செயலாளர் நாயகப் பதவிக்கு நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரையைப் பேரவை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

6.4 ஏனைய சட்டங்களின் பிரகாரம் கடமைகள்

ஏதாவது எழுத்திலான சட்டத்தினால் பேரவைக்கு விதிக்கப்பட்டுள்ள அல்லது குறிததொதுக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகளை அரசியலமைப்பின் 41ஏ(2) ஆம் உறுப்புரைகள் பேரவைக்கு வழங்குகின்றன.

அதன் பிரகாரம், மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியின் போது பின்வரும் செயற்பாடுகளைப் பேரவை மேற்கொண்டது:-

- **இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்களின் நியமனம்**

2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரம், அரசியலமைப்புப் பேரவையுடனான ஒத்திசைவுடன், கொள்கை அபிவிருத்தி மற்றும் அமுலாக்கல் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஐந்து (05) உறுப்பினர்களை இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு கொண்டிருத்தல் வேண்டும். பொறியியல், சட்டம் மற்றும் வியாபார முகாமைத்துவம் ஆகிய ஒவ்வொரு துறையிலிருந்தும் தகைமையும் அனுபவமும் கொண்ட குறைந்தது ஓர் உறுப்பினரையாவது இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஆக்கவமைவு கொண்டிருத்தல் வேண்டும்.

ஆணைக்குழுவின் உறுப்பினராக எந்தவொரு ஆளையும் நியமிப்பதற்கான அதன் ஒத்திசைவினைப் பேரவை வழங்குவதற்கு முன்பு, அவ்வாறான ஆள் குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 5(1) இன் கீழ் நியமனத்துக்குத் தகைமையுடையவர் என்பதையிட்டும் அச்சட்டத்தின் பிரிவு 5(2) இன் கீழ் நியமனத்திற்குத் தகைமையிழந்தவர் அல்ல என்பதையிட்டும் பேரவை தாமே திருப்தியுற வேண்டும். பிரிவு 3 இன் கீழ் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்குக் கருத்தில் கொள்ளப்படும் எந்த ஒரு நபரிடமும், நியமனம் தொடர்பாகப் பேரவையின் செயற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காகத் தேவைப்படுத்தப்படக்கூ கூடிய அவ்வாறான தகவல்களைப் பேரவைக்கு வழங்குமாறு தேவைப்படுத்துவதற்குப் பேரவை வலுவூட்டப்பட்டுள்ளது.

உறுப்பினரொருவரின் பதவிக்காலம் மீள்நியமனத்துக்கான தகுதியுடன் ஐந்து (05) வருடங்கள் எனச் சட்டம் குறித்துரைக்கின்றது. ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர் இறப்பின் காரணமாக, இராஜினாமாச் செய்வதன் காரணமாக, அல்லது வேறு காரணங்களால், அவரின் பதவியினை வறிதாக்கினால், பிரிவுகள் 5 மற்றும் 7 ஆகியவற்றின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அவரின் இடத்துக்கு வேறொரு பொருத்தமான ஆளை அரசியலமைப்புப் பேரவையின் ஒத்திசைவுடன் அமைச்சர் நியமிக்க வேண்டும். அவ்வாறு நியமிக்கப்படும் ஆள், பதவியில் யாரைப் பின்தொடர்ந்தாரோ அந்த உறுப்பினரின் பதவிக் காலத்தின் எஞ்சிய காலப்பகுதிக்காக அப்பதவியினை வகிக்க வேண்டும் என பிரிவு (6(4) குறிப்பிடுகின்றது.

மீளாய்வின் கீழுள்ள காலப்பகுதிக்காகப் பேரவை பின்வரும் நியமனங்களை ஆராய்ந்தது.

i. 2022.08.13 அன்று செயலூக்கம் பெறும் வகையில், பேராசிரியர் ஜனக்க ஏக்கநாயாக்கவின் இராஜினாமாவுடன் இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் ஏற்பட்டுள்ள வெற்றிடம் தொடர்பாக நிதி அமைச்சின் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் பேரவைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் ஏற்பட்ட வெற்றிடத்துக்காக, கௌரவ நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் பற்றிய அமைச்சரினால் திரு. டக்ளஸ் நாணாயக்கார பெயர்குறித்து நியமிக்கப்பட்டார். குறிப்பிட்ட நியமனத்துக்கான சுயவிபரக் கோவைக்கு மேலதிகமாக, மேற்குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 5 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் தகைமையின்மைகள் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்காகதற்காக நியமிக்கப்பட்டவரிடமிருந்து சத்தியக்கடதாசியொன்றை பேரவை பெற்றது. இதன் பிரகாரம், இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினராக திரு. டக்ளஸ் நாணாயக்காரவை நியமிப்பதற்கான கௌரவ நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் பற்றிய அமைச்சரின் பெயர் குறித்த நியமனத்துடன் ஒத்திசைவதற்குப் பேரவை ஏகமனதுடன் இணங்கியது.

ii. 2023.02.06 அன்று செயலூக்கம் பெறும் வகையில் திரு. பி.கே.யூ.ஏ. விக்கிரமசிங்க மற்றும் திரு. மொஹான் சமரநாயக்க ஆகியோர் தங்களின் பதவிகளில் இருந்து விலகியதால் இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின்

ஆக்கவமைவில் ஏற்பட்ட இரு வெற்றிடங்கள் தொடர்பாகப் பேரவைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக திரு. எஸ்.ஜீ. சேனாரத்ன மற்றும் திரு. டி.என். குஷான் ஜயசூரிய ஆகியோரின் நியமனத்தினைக் கௌரவ அமைச்சர் பெயர்குறித்து நியமித்தார். சுயவிபரக் கோவைக்கு மேலதிகமாக, மேற்குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 5 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் தகைமையின்மைகள் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்டவர்களிடமிருந்து பேரவை சத்தியக்கடதாசிகளைப் பெற்றிருந்தது. இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினராக திரு. எஸ்.ஜீ. சேனாரத்னவை நியமிப்பதற்கான பெயர் குறித்த நியமனத்துடன் ஒத்திசைவதற்குப் பேரவை ஏகமனதாக இணங்கியது. இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்குத் தேவையான அனுபவம் மற்றும் நிபுணத்துவம் ஆகியவற்றை திரு. டி.என். குஷான் ஜயசூரிய கொண்டுள்ளதைப் பேரவை ஏற்றுக்கொண்ட போதிலும், இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினராக அவர் நியமிக்கப்படுவதற்கு, மேற்குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 5(2) (எ) இன் பிரகாரம், சுயவிபரக் கோவையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அவரது ஈடுபாடுகளுடன் அவர் தனிநலன் முரண்பாடுகள் எவற்றினையும் தவிர்த்தல் வேண்டும். இதன் பிரகாரம், மேலுள்ள தேவைப்பாட்டுக்கு உட்பட்டு, திரு. டி.என். குஷான் ஜயசூரியவை நியமிப்பதற்கான கௌரவ நிதி அமைச்சரின் பெயர்குறித்த நியமனத்துடன் ஒத்திசைவதற்குப் பேரவை ஏகமனதாக இணங்கியது. எவ்வாறாயினும், திரு. டி. என். குஷான் ஜயசூரியவுக்கு விநியோகிக்கப்பட்ட நியமனக் கடிதம் மீளப்பெறப்பட்டதாகப் பேரவைக்குப் பின்னர் அறிவிக்கப்பட்டது.

iii. இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் இருந்து திரு. ஜனக்க ரத்நாயக்க நீக்கப்பட்டது பற்றிப் பேரவைக்கு அறிவிக்கப்பட்டது.

iv. இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினராகப் பேராசிரியர் எம்.ஏ.ஆர்.எம். பர்னாந்துவை நியமிப்பதற்கான கௌரவ நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் பற்றிய அமைச்சரின் பெயர் குறித்த நியமனத்துடன் ஒத்திசைவதற்குப் பேரவை ஏகமனதாக இணங்கியது. பெயர் குறித்த நியமனத்தினைப் பரிசீலிப்பதற்காக, குறிப்பிட்ட நியமனத்துக்கான

சுயவிபரக் கோவைக்கு மேலதிகமாக, மேற்குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 5 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் தகைமையின்மைகள் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்டவரிடமிருந்து சத்தியக்கடதாசியொன்றை பேரவை பெற்றது.

6.5 அரசியலமைப்புப் பேரவையின் கடமைகள் மற்றும் பணிகளை நிறைவேற்றுதலுடனும் புரிதலுடனும் தொடர்புடைய விதிகள்

பேரவை, அதன் கடமைகள் மற்றும் பணிகளை நிறைவேற்றுதலுடனும் புரிதலுடனும் தொடர்புடைய பூரணமான விதிகளின் தொகுதிக்கு இறுதி வடிவம் கொடுக்கும் செயன்முறையிலுள்ளது.

--//--

The First Report of the Constitutional Council submitted in terms of Article 41G (1) of the Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka

For the period from January to July 2023

Contents

1 Establishment of the Constitutional Council 3
2 Appointment of Members to the Constitutional Council 4
3 Duties and Functions of the Constitutional Council 6
3.1 Functions of the Council 6
3.2 Duties of the Council (Article 41G) 8
3.3 Meetings of the Council (Article 41E) 8
4 Secretary-General and Staff of the Council 9
5 Formation of the Commissions referred to in the Schedule to the Article 41B of the Constitution 10
6 Work performed by the Council during the period under review 15
6.1 Meetings of the Council 15
6.2 Recommendation of Persons for Appointment to Commissions referred to in the Article 41B of the Constitution 15
6.3 Approval of Persons for Appointment to Offices specified in the Article 41C of the Constitution 17
6.4 Duties as per other Laws 19
6.5 Rules relating to the performance and discharge of the duties and functions of the Constitutional Council 20

1 Establishment of the Constitutional Council

The present Constitutional Council was introduced by the Twenty First Amendment to the Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka, which was endorsed on 31st of October 2022.

The composition of the Constitutional Council (hereinafter also referred to as the Council) as per the Article 41A is as follows.

(a) the Prime Minister;

(b) the Speaker;

(c) the Leader of the Opposition in Parliament;

Ex-officio members

(d) one Member of Parliament appointed by the President;

